செ.வெ.எண்: 518 நாள்: 16.09.2021

**புதுக்கோட்டை மாவட்டம்**

**ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் ரூ.37.65 லட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கான பூமி பூஜையினை**

**மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கான பூமி பூஜையினை மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் இன்று (16.09.2021) துவக்கி வைத்தார்.

பின்னர் மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் பொதுமக்களின் கோரிக்கைக்கேற்ப தொடர்ந்து வளர்ச்சித் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றையதினம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், நெய்வத்தளி கிராமத்தில் அருள்மிகு காளியம்மன் திருக்கோவில் வளாகத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் உணவுக்கூடம் அமைக்கும் பணி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் வளாகத்தில் ரூ.8.49 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி, மேற்பனைக்காடு ஊராட்சி, மேற்பனைக்காடு கிழக்கு கிராமத்தில் ரூ.10.19 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடப் பணி, மேற்பனைக்காடு ஊராட்சி, மேற்பனைக்காடு கிழக்கு ஆதிதிராவிடர் காலனியில் ரூ.4.97 லட்சம் மதிப்பீட்டில் சிறிய பாலம் கட்டும் பணிகளுக்கான பூமி பூஜைகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் நிதியின்கீழ், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மேற்பனைக்காடு கிழக்கு கிராமத்தில் ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் பயணியற் நிழற்குடை அமைக்கும் பணியும் என மொத்தம் ரூ.37.65 லட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பகுதி பொதுமக்களின் கோரிக்கைக்கேற்ப ஏற்கனவே பேருந்துவசதி, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்களின் ஏனைய கோரிக்கைகள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தமிழக அரசின் இதுபோன்ற வளர்ச்சித் திட்டங்களை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் (பொ) அபிநயா, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கவிதா மேகராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் சிங்காரவேலு, வட்டாட்சியர் காமராஜ், உதவிப் பொறியாளர் சேது மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**